155

சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – நெடுஞ்சாலைத் துறை – கருணையடிப்படைப் பணி நியமனம் – காலஞ்சென்ற (திரு)எச்.ஜோசப் உதய சந்திரகுமார் என்பவரின் மகன் திரு.ஜெ.ஜெபாக்கர் சாமுவேல் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் – பணிவரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

நெடுஞ்சாலை (ம) சிறு துறைமுகங்கள் (எச்.எம்.1) துறை

அரசாணை (2ப) எண். 70

நாள் 26.12.2019.
விகாரி, மார்கழி 10,
திருவள்ளுவராண்டு 2050.

படிக்கவும்:–

1. அரசாணை (நிலை) எண்.560, தொழிலாளர் (ம) வேலை வாய்ப்புத் துறை, நாள் 03.08.1977.
2. நெடுஞ்சாலைத்துறை முதன்மை இயக்குநர், சென்னை–25 கடித எண்.59363/ நிர்.1(2)/1998, நாள் 20.05.2019.
3. அரசாணை (நிலை) எண். 100, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (எம்) துறை, நாள் 01.08.2018.

----------

ஆணை:–

நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் உதவியாளராகப் பணிபுரிந்து வந்த திரு.எச்.ஜோசப் உதய சந்திர குமார் என்பவர் 14.06.1997 அன்று பணியிடையே காலமானார். அவரது பணி இளநிலை உதவியாளர் பதவியில் 21.12.1972 முதல் வரன்முறை செய்யப்பட்டுள்ளது. அவரது மனைவி திருமதி.ஜீன்.மெர்சி வசந்தி என்பவர் கேட்டுக் கொண்டதன் பேரில் அவரது மகன் திரு.ஜெ.ஜெபாக்கர் சாமுவேல் என்பவர் நெடுஞ்சாலைத் துறையில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டு 12.03.2018 முற்பகல் முதல் பணியாற்றி வருகிறார். அவர் பத்தாம் வகுப்புப் படிப்பில் தேர்ச்சி பெற்றுள்ளார். அரசு ஊழியர் இறந்த நாளில் தனியரின் வயது 18 வருடம் 10 மாதம் ஆகும். எனவே, தனியர் இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கான கல்வி மற்றும் வயது குறித்த தகுதிகளை நிறைவு செய்துள்ளதாக மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் நெடுஞ்சாலைத்துறை முதன்மை இயக்குநர் அவர்கள் தெரிவித்துள்ளார். மேலும் தனியரது குடும்பத்தில் எவரும் அரசு மற்றும் தனியார் துறையில் பணி புரியவில்லை என்பதற்கும் அவரது குடும்பம் வறிய நிலையில் உள்ளது என்பதற்கான சான்றுகளையும் மற்றும் அவரது பணி வரன்முறைக்கு தேவைப்படுகின்ற அனைத்து மூலச் சான்றுகளையும் நெடுஞ்சாலைத்துறை முதன்மை இயக்குநர் அரசுக்கு சமர்ப்பித்துள்ளார்.

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் வெளியிடப் ஆணைகளின்படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் நியமனம் செய்யப்பட்ட திரு.ஜெ.ஜெபாக்கர் சாமுவேல் என்பவரின் பணியினை பணியில் சேர்ந்த நாளான 12.03.2018 முற்பகல் முதல் இளநிலை உதவி பதவியில் வரன்முறை செய்வதற்கு ஏதுவாக அரசின் ஆணையிை பெற்றுத் தருமாறு நெடுஞ்சாலைத்துறை முதன்மை இயக்குநர் அரசைக் கே கொண்டுள்ளார்.

3. நெடுஞ்சாலைத் துறை முதன்மை இயக்குநர் அவர்களின் செயற்குறி அரசு நன்கு பரிசீலனை செய்து, அதனை ஏற்று, தமிழ்நாடு அமைச்சுப் பணி நெடுஞ்சாலைத் துறையில் கருணையடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டு திரு.ஜெ.ஜெபாக்கர் சாமுவேல் என்பவரின் பணியினை 12.03.2018 முற்பகல் மு இளநிலை உதவியாளர் பதவியில், தனியர் அப்பதவியில் பணி நியமனத்திற் போதிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்மு செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்மு செய்யப்படுவதால், ஊதிய உயர்வுகள், நிலுவைத் தொகை ஏதும் இருப்பின், தன அவற்றைப் பெற விதிகளின்படித் தகுதியுடையவராகிறார்.

4. இந்த அரசாணை, தொழிலாளர் (ம) வேலை வாய்ப்புத் துறை அ.சா.எண்.21234/க்யூ2/2019-1, நாள் 09.12.2019-இல் மற்றும் பணியாளர் நிருவாகச் சீர்திருத்தத் (ஜி) துறையின் அ.சா.எண். 41142/ஜி2/2019-1, ந 17.12.2019-இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.மணிவாசன்
அரசு முதன்மைச் செயலாளர் (முகூபெ

பெறுநர்

முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை, சென்னை - 25.
திரு.ஜெ.ஜெபாக்கர் சாமுவேல், இளநிலை உதவியாளர் (நெ).
(முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை, சென்னை-25. வழியாக.)
மாநில கணக்காயர், சென்னை-18.

நகல்:-

அரசு முதன்மைச் செயலாளர் (முகூபொ) அவர்களின் தனிச் செயலாளர்,
நெடுஞ்சாலை (ம) சிறு துறைமுகங்கள் துறை, சென்னை-9.
அரசு கூடுதல் செயலாளரின் நேர்முக எழுத்தர்,
நெடுஞ்சாலை (ம) சிறு துறைமுகங்கள் துறை, சென்னை-9
தொழிலாளர் (ம) வேலை வாய்ப்புத் துறை. சென்னை-9.
பணியாளர் (ம) நிருவாகச் சீர்திருத்தத் துறை, சென்னை-9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.
(C.7018/HM1/2019)

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//